செய்தி வெளியீடு எண் : 348 நாள் : 17.5.08

## தமிழக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் அறிவுரை

தமிழக ஹோட்டல்கள் சங்க நிர்வாகிகளுடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (17.05.2008) தலைமைச் செயலகத்தில் கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தினார்கள். தமிழக ஹோட்டல்கள் சங்க நிர்வாகிகள் அனைவரும் இக்கூட்டத்தில் பங்கு பெற்றனர்.

கூட்டத்தை துவக்கிவைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் உரையாற்றுகையில் 18.04.2007 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் ஹோட்டல்களில் உணவு பண்டங்களின் விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது என்றும், ஓராண்டு காலம் நிறைவடைந்த பிறகும் ஹோட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலை குறைக்கப்படாமல் அதிகமாகவே உள்ளது என்பதை சுட்டிக்காட்டினார்கள். அன்றைய கூட்டத்தின்போது ஹோட்டல்கள் சங்க நிர்வாகிகள் காவல்துறை மற்றும் மாநகராட்சிகளிடமிருந்து உரிமம் பெறுவதில் பல்வேறு இடர்பாடுகளை சந்திக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்ததால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இது குறித்து தெரிவித்து மாநகராட்சி, காவல்துறை ஆணையரிடமிருந்து தடையில்லா சான்றிதழ் பெற்ற பின்னர் உணவகங்களுக்கு உரிமம் வழங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. 20.04.2008 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் போன்ற அத்தியாயவசியப் பொருட்களை இருப்பு வைக்க கட்டுப்பாட்டு ஆணைகள் பிறப்பிக்கவும் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், சமையல் எண்ணெய்க்கான இறக்குமதி வரியை குறைத்தும், உணவுப்பொருட்களின் இணையதள வர்த்தகம் முழுவதும் தடை செய்யப்பட்டும், விலையேற்றத்தை தடுக்கவும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாமர மக்கள், தினக்கூலி பெற்று வேலை செய்யும் ஊழியர்கள், தொழிலாளர்கள், வெளியூர்களிலிருந்து சென்னைக்கு தினந்தோறும் வந்து செல்பவர்கள்,

சுற்றுலா செல்பவர்கள் ஆகியோர்களுக்கு உணவகங்கள் தான் உயிர்நாடி. அத்தகையவர்கள் உணவகங்களின் விலையை நினைத்து பட்டினியால் பரிதவிக்கக்கூடாது. பாமர மக்களையும், நமது விருந்தினர்களையும் நாம் உணவளித்து உபசரிப்பதே தமிழர்களின் பண்பு. இட்லி, வடை, பூரி, பொங்கல் போன்றவை அன்றாடம் பொது மக்கள் விரும்பி உண்ணும் உணவு என்பதால் இவற்றின் விலையை உடனடியாக கட்டுப்படுத்தப்பட வேண்டும். 1976–ம் ஆண்டில் நடைமுறையில் இருந்த சில கடுமையான சட்டங்களைப் போல அரசு மீண்டும் சட்டமியற்றக்கூடிய நிலையை உணவகங்கள் ஏற்படுத்தக்கூடாது என்றும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

ஹோட்டல்கள் உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் உடனடியாக உணவுப் பண்டங்களின் விலையை குறைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதிமொழி அளித்துள்ளார்கள்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. க. ராஜாராம், இ.ஆ.ப., தமிழ்நாடு ஹோட்டல்கள் சங்கத் தலைவர் வசந்தபவன் திரு. ரவி உள்பட அனைத்து நிர்வாகிகளும் பங்கு பெற்றனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.